[1981 பிப்ரவரி 5

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, மலைப் பகுதி முழுவதையும் போட தற்போது ஆரம்பிக்கும் திட்டம் இல்லை. ஆனால் நான் ஏற்கனவே சொன்னதைப் போல கிலோ மீட்டர் 74/6-இல் பழுது அடைந்திருந்த தடுப்புச் சுவரை பழுது பார்க்க 52,000 ரூபாய் ஏற்கனவே ஒதுக்கப் பட்டு வேலைகள் துவங்கப்பட்டிருக்கின்றன.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, தேக்கடி சுற்றுலா இடமாக அமைக்கப் பட்டிருக்கிறது. அங்கே இரவிலே செல்லுகின்ற வாகனங்கள் மஞ்சு மூட்டத்தினால் பாதை சரியாக இல்லாத காரணத்தால் சாலை விபத்துக்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பாக இருக்கிறது. ஆகவே, இரவு 12 மணியிலிருந்து விடியற்காலை 6 மணி வரையில் அந்தச் சாலையிலே பஸ் மற்றும் கார் போன்ற வாகனங்கள் போவதற்குத் தடை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை.)

இடைப்பாடி நகரில் போக்குவரத்துக் கழகப் பணிமனை.

*வினா எண் 38—திரு இ. கணேசன் : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் இடைப்பாடி நகரில் அண்ணா போக்குவரத்துக் கழக ''பணிமனை'' ஒன்று கட்ட அனுமதி கேட்டு அரசுக்குச் செயற்குறிப்பு வந்துள்ளது ?

(ஆ) ஆம் எனில் எத்தனை ரூபாய் செலவில் செய்ய திட்ட வரைவு வந்துள்ளது ?

(இ) அந்த விண்ணப்பத்தின் மீது அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது ?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) பணிமனை சுமார் ஆறு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட இருக்கிறது.

(இ) பணிமனைக்கான நிலத்தைக் கையகப்படுத்தும் பணி நடந்து வருகின்றது. நிலம் கையகப்படுத்தப்பட்டு நிலத்தை சம்பந்தப்பட்ட வருவாய்த்துறை அதிகாரிகள் அண்ணா போக்கு வரத்துக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டபின், கட்டிட வேலைகள் மேற்கொள்ளப்படும்.

1981 பிப்ரவரி 5]

திரு. இ. கணேசன் :—பேரவைத் தலைவரவர்களே, பணிமனை இல்லாமல் இன்னும் பல கிராமங்களுக்கும் பல பெரு நகரங்களுக்கும், புதிய வழித்தடங்கள் விடப்படாமல் இருக்கின்றன. அதனால் மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள் என்பதை அரசு உணருமா? உடனடியாக அந்தப் பணிமனையை நடப்பாண்டில் கட்டுவதற்கான திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவரவர்களே, பணிமனை வேலைகள் விரைவாக முடிக்கப்பட்டு, அங்கே புதிதாகப் போக்குவரத்து வசதி இல்லாத கிராமங்களுக்கு அந்த வசதி ஏற்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இ. கணேசன்: பேரவைத் தலைவரவர்களே, இடைப்பாடி அண்ணா போக்குவரத்துக் கழகம் சுமார் இரண்டாண்டுகளுக்கு முன் ஏற்படுத்தப்பட்டது. அங்கே இரவு நேரங்களில் வண்டிகள் நிற்கக்கூட முடியாமல் பாதையிலே நிறுத்தப்பட்டு, தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு இல்லாமல் செய்து வருகிறார்கள் ஆகவே உடனடியாக அந்த வேலைகளைச் செய்ய டெப்போவைக் கட்டி முடிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே 15 பேருந்துகள் இருக்கின்றன என்றும் அவைகளை நிறுத்துவதற்கு இடம் இல்லாத காரணத்தால்தான் அரசாங்கம் அந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். விரைவாக அந்த வேலை முடிககப்படும்.

விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும் டிராக்டர்களுக்கு வரி விலக்கு.

*வினா எண் 39—திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படுகின்ற டிராக்டர்களுக்கு டோக்கன் காலாண்டுக்கு ஒரு முறை வாங்கும் முறையை ரத்து செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது ரத்து செய்யப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ) விவாயத்திற்காகப் பயன்படுத்தப்படும் டிராக்டர்-டிரெயிலர் வண்டிகள் வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. அத்தகைய